**செய்தி வெளியீடு எண்:767** **நாள்: 11.11.2017**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையில் இன்று (11.11.2017) தலைமைச் செயலகத்தில் வடகிழக்கு பருவமழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள் மற்றும் எடுக்கப்படவேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

ஏற்கனவே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ளும் பொருட்டு, 8.9.2017, 9.10.2017 மற்றும் 24.10.2017 ஆகிய நாட்களில் ஆய்வுக் கூட்டங்கள் நடத்தப்பட்டன. இதில் அரசு உயரதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை உயர் அதிகாரிகள், உள்ளாட்சித்துறை அதிகாரிகள் ஆகியோர் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் பற்றி விரிவாக அறிவுறுத்தப்பட்டது.

பருவ மழை துவங்கும் முன்னதாக அனைத்து மாவட்டங்களுக்கும், சென்னையில் உள்ள 15 மண்டலங்களுக்கும் மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களை கண்காணிப்பு அலுவலர்களாக நியமித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். மேலும், காஞ்சிபுரம், திருவள்ளூர், கடலூர், நாகப்பட்டினம் மாவட்டங்களிலும் நிவாரணப் பணிகளை துரிதப்படுத்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் மூத்த இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களை கொண்ட கண்காணிப்பு அலுவலர்களை நியமித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்கள். இவ்வுத்தரவிற்கிணங்க பலத்த மழை பெய்தபோது, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், இந்திய ஆட்சிப் பணி அலுவலர்களும் இரவு பகல் பாராமல் நிவாரணப் பணிகளில் தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டனர்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கேற்ப, நிவாரண முகாம்களில் பாதிக்கப்பட்ட நபர்கள் பாதுகாப்பாக தங்கவைக்கப்பட்டு உணவு மற்றும் மருத்துவ வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. மழைக் காலங்களில் ஏற்படக்கூடிய பாதிப்புகளிலிருந்து பாதுகாக்கும் விதமாக நடமாடும் மருத்துவ முகாம்கள் உட்பட 4,569 மருத்துவ முகாம்கள் செயல்பட்டு வருகின்றன. இம்முகாம்களின் மூலம் 3.63 லட்சம் நபர்கள் பயன் பெற்றுள்ளனர். நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க 3.02 லட்சம் நபர்களுக்கு இலவசமாக நிலவேம்பு குடிநீர் வழங்கப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களில் வடகிழக்கு பருவமழையினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு 3.11.2017 மற்றும் 5.11.2017 ஆகிய நாட்களில் நேரில் சென்று, போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகளை பார்வையிட்டு, ஆய்வு செய்து, முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்கி ஆறுதல் கூறினார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தனது நேரடி ஆய்வின்போது, நீர்நிலைகளில் இருக்கின்ற ஆக்கிரமிப்புகளைப் பொறுத்தவரை, ஏற்கனவே உச்சநீதிமன்றம் மற்றும் உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள ஆணைகளின்படி மாண்புமிகு அம்மாவினுடைய அரசு ஆக்கிரமிப்புகளை அகற்றிக் கொண்டிருக்கின்றது என்றும், மழை நீரை வெளியேற்றுவதற்கு நிரந்தர தீர்வு காண்பதற்கு வடிகால் வசதி செய்து கொடுப்பதற்காக திட்டம் தீட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றது என்றும், அப்பணிகளெல்லாம் நிறைவேற்றப்படும் பொழுது, மழைநீர் தேங்கும் நிலை முற்றிலும் அகற்றப்படும் எனவும் தெரிவித்தார்கள்.

கடலோர மாவட்டங்களைப் பொறுத்தவரை, குறிப்பாக பாதிக்கப்பட்ட நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில், அந்தந்த மாவட்ட அமைச்சர்கள், அதிகாரிகளுடன் சேர்ந்து நிவாரணப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது எனவும், விவசாய நிலங்களில் தேங்கியுள்ள மழைநீரை வெளியேற்ற அரசு துரித நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றது எனவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இன்று (11.11.2017) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், வடகிழக்குப் பருவ மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட நிவாரணப் பணிகள் மற்றும் எடுக்கப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து சென்னை மாநகராட்சி மண்டலம் வாரியாகவும், மாவட்டம் வாரியாகவும் விரிவாக ஆய்வு செய்தார்கள். மேலும், இனி எப்போதும் பாதிப்பு ஏற்படா வண்ணம் நிரந்தரத் தீர்வுக்கான திட்டங்கள் குறித்தும் ஆய்வு செய்தார்கள். அதன்பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசியதாவது:

“2015 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளத்தின்போது மாண்புமிகு அம்மா அவர்கள் மழை நீரால் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு பகுதிக்கும் கண்காணிப்பு அதிகாரிகளை நியமித்தும் ஒருங்கிணைப்பாளர்களாக மாண்புமிகு அமைச்சர்களை நியமித்தும் இரவு பகல் பாராது பணியாற்றியதன் விளைவாக வெள்ளத்தின் கடுமை வெகுவாகக் குறைக்கப்பட்டது.

மாண்புமிகு அம்மா அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசும், இயல்புக்கு அதிகமாக பெய்த மிக கனத்த மழை காரணமாக சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் ஏற்பட்ட பாதிப்பினை சரிசெய்ய மாண்புமிகு அமைச்சர்கள் தலைமையில் கண்காணிப்பு அதிகாரிகளை நியமித்தது. அவர்கள் இரவு பகல் பாராது பணியாற்றி, தேங்கிய மழை நீரினை மிக விரைவாக வெளியேற்றினர். பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்கள், அதிகாரிகள் ஆற்றிய பணியை வெகுவாகப் பாராட்டினர்.

நாம் செய்யும் பணிகள் மக்களுக்குத் தெரியும். நாம் நம் பணியைத் தொடர்ந்து செய்து கொண்டிருப்போம். இனிவரும் காலங்களில், நாம் செய்யும் பணிகளை மக்களிடம் கொண்டு செல்வதற்கான போதுமான தகவல் பரிமாற்ற நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும்.

நீதிமன்றங்களின் ஆணைகளின்படி நீர்நிலைகளிலுள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். ஆக்கிரமிப்பு பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களுக்கு குடிசை மாற்று வாரிய குடியிருப்புகள் வழங்கப்பட வேண்டும்.

வானிலை ஆய்வு மையத்தின் அறிக்கையின்படி வரும்வாராத்தில் மழை பெய்ய வாய்ப்பு உள்ளதால், அதனை எதிர்கொள்ள அனைத்து முன்னேற்பாடுகளையும் துரிதமாக செயல்படுத்தி, அனைத்து துறை அதிகாரிகளும் தயார் நிலையில் இருக்க வேண்டும். குறிப்பாக மக்களுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீரை சீரான முறையில் விநியோகம் செய்ய வேண்டும்.

**<u>பெருநகர சென்னை மாநகராட்சி</u>**

சென்னை மாநகரில் முறையான மழை நீர் வடிகால்கள் இல்லாத பகுதிகளை கண்டறிந்து உடனடியாக அப்பகுதிகளில் வடிகால்கள் அமைக்கும் பணி மேற்கொள்ளப்பட வேண்டும். வடிகால்களிலிருந்து தூர்வாரப்படும் கழிவுகள் சாலையோரங்களில் குவிக்கக்கூடாது. அவைகள் உடனடியாக அகற்றப்பட வேண்டும். சென்னை மாநகரத்தில் உள்ள நெடுஞ்சாலைகளின் மேற்கு பகுதியில் மழைநீர் வடிகால்கள் அமைக்கப்பட வேண்டும். சிறுபணிகள் மற்றும் சாலை வெட்டும் பணிகள் ஜனவரி 2018க்குள் முடிக்கப்பட வேண்டும்.

ஓட்டேரி நல்லாவில் அமைந்துள்ள ஸ்டீபன்சன் சாலையில் உள்ள பழைய பாலத்தை இடித்து, வெள்ளநீர் தடையின்றி செல்லும் வகையில் உயர்மட்ட பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விழுந்த மரங்களை உடனடியாக அப்புறப்படுத்துவதற்கு தேவையான வெவ்வேறு அளவும் திறனும் கொண்ட மரம் அறுக்கும் இயந்திரங்கள் தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

மழைநீர் தேங்கியுள்ள தாழ்வான பகுதிகளில் மின் இணைப்புப் பெட்டிகள் கண்டறியும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட மின் பகிர்மான வட்டத்திற்கு உடனடியாக தெரிவிக்கப்பட்டு, ஒருங்கிணைந்து, அப்பகுதிகளில் உடனடியாக மின் இணைப்பு துண்டிப்பதோடு மட்டுமல்லாமல், அவற்றை உயர்வான இடத்திற்கு மாற்றுவதற்கு உரிய நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

நிவாரண மையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு மட்டுமல்லாமல் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் உணவு மற்றும் குடிநீர் தங்கு தடையின்றி வழங்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

வடகிழக்கு பருவமழையினால் நோய் தொற்றுகள் பரவாமல் தடுக்க தேவைக்கேற்ப நடமாடும் மருத்துவக்குழுக்கள் அமைத்து, மக்களுக்கு சிறப்பான மருத்துவ சேவைகள் வழங்க வேண்டும்.

**<u>பொதுப்பபணித்துறை</u>**

ஆற்றுப்படுகை மற்றும் கால்வாய்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் நீதிமன்ற உத்தரவின்படி அகற்ற துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

பக்கிங்காம் கால்வாயில் தேவையான எண்ணிக்கையில் தடுப்புகள் அமைக்கப்பட வேண்டும்.

குழாய் வடிவிலான அனைத்து சிறுபாலங்களும் (Pipe culvert) சதுர அல்லது செவ்வக வடிவிலான பாலங்களாக (Box culvert) மாற்றப்பட வேண்டும்.

தங்குதடையின்றி தண்ணீர் செல்வதற்கு ஏதுவாக கூடுதலாக சிறுபாலங்கள் கட்டப்படவேண்டும்.

சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள அனைத்து சிறு பாசன ஏரிகளும் தண்ணீர் சேகரிக்கும் அமைப்பாக மாற்றப்பட வேண்டும். மேலும் பிற மாவட்டங்களில் ஏரிகள் மற்றும் குளங்களில் மேற்கொள்ளப்பட்ட வண்டல் மண் தூர் வாரும் பணிகள், சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட வேண்டும். வெள்ளம் ஏற்படுவதை தடுக்கும் வகையில் தேவையான இடங்களில் மழைநீர் வடிகால் அமைப்புகள் மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

சென்னையில் உள்ள ஓட்டேரி நல்லா கால்வாய் உடனடியாக தூர் வாரி மழை நீர் செல்வதற்கு வழி ஏற்படுத்தப்பட வேண்டும்.

விருகம்பாக்கம் கால்வாய், ஓட்டேரி நல்லா கால்வாய், மாதவரம் கால்வாய் போன்ற சென்னை உள்ள கால்வாய்களை சிமெண்ட் லைனிங் ( Cement Lining) செய்ய வேண்டும். பள்ளிக்கரணை சதுப்புநிலப்பகுதியை மழை நீர் சென்றடையும் வகையில் கூடுதலாக வழிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.

பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலை துறைகள் மூலம் தற்போது நடைபெற்று வரும் பணிகள் அனைத்தும் துரிதமாக முடிக்க வேண்டும்.

**<u>நகராட்சி நிர்வாகத்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறை</u>**

தாழ்வான மற்றும் சாலையோர பகுதிகளில் தேங்கியுள்ள நல்ல மழைநீரை ஊரணி மற்றும் குளங்களில் சேமித்து வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

நிவாரண மையங்களில் தங்கியுள்ள மக்களுக்கு மட்டுமல்லாமல் பாதிக்கப்பட்ட மக்கள் அனைவருக்கும் உணவு மற்றும் குடிநீர் தங்கு தடையின்றி வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

வடகிழக்கு பருவமழையினால் பாதிக்கப்படாத மாவட்டங்களில் உள்ள பணியாளர்கள் மற்றும் மரம் அறுக்கும் இயந்திரங்கள் போன்ற உபகரணங்கள் மிகக்குறுகிய காலத்தில் பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்கு அனுப்பி வைத்திட தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும்.

பழுதடைந்த மற்றும் பயன்பாடற்ற அனைத்து தனியார் கட்டடங்களை ஆய்வு செய்து, அவ்விடங்களில் பொதுமக்கள் செல்லா வண்ணம் எச்சரிக்கை பலகைகள் வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். பழுதடைந்த சாலைகளையும் மற்றும் சாலைகளில் உள்ள பள்ளங்களையும் உடனடியாக சீரமைக்க வேண்டும்.

**<u>உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை</u>**

அத்தியாவசிய பொருட்களான அரிசி, சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் ஆகியன இரண்டு மாத காலத்திற்கு போதுமான அளவில் இருப்பு வைத்திருப்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

கிடங்குகளிலோ, நியாய விலைக்கடைகளிலோ, அதன் அருகிலேயோ தண்ணீர் தேங்க விடக்கூடாது.

**<u>சென்னை பெருநகர குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியம்</u>**

மழை நீர் சேகரிப்பு, பயன்படுத்தப்பட்ட நீரை மறுசுழற்சி செய்தல் மற்றும் எதிர்மறை சவ்வூடு பரவல் முறையில் மூன்றாம்நிலை சுத்திகரிப்பு (Tertiary treatment Reverse Osmosis) தொலைநோக்கு திட்டங்களாக வகுக்கப்பட்டு, இவை 2030 வரை பயன்பாட்டில் இருக்கும் வகையில் சென்னை பெருநகர குடிநீர் வாரியத்தின் முக்கிய திட்டங்களில் சேர்க்கப்பட வேண்டும்.

**<u>சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்</u>**

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம், நஞ்சை நிலமாற்ற விதிகளில் தேவையான திருத்தங்கள் செய்ய வேண்டும்.

**<u>தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியம்</u>**

வருங்காலங்களில், தமிழ்நாடு குடிசை பகுதி மாற்று வாரியம் செயல்படுத்தும் குடியிருப்புத் திட்டங்களில் மழைநீர் வடிகால்கள் இடம் பெற வேண்டும். அவை சென்னை பெருநகர மழை நீர் வடிகால்களுடன் இணைக்கும் வகையில் இருக்க வேண்டும்.

ஆக்கிரமிப்புப் பகுதிகளிலிருந்து வெளியேற்றப்பட்ட மக்களுக்கு மாற்று குடியிருப்புகள் வழங்கப்பட வேண்டும்.

**<u>வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை</u>**

பழுதடைந்த மற்றும் பயன்பாடற்ற அனைத்து அரசு மற்றும் பொது கட்டடங்களை ஆய்வு செய்து, அவ்விடங்களில் பொதுமக்கள் செல்லா வண்ணம் எச்சரிக்கை பலகைகள் வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

வேளாண் துறையுடன் ஒருங்கிணைந்து பாதிப்படைந்த விவசாய நிலங்களை துரிதமாக மதிப்பீடு செய்ய வேண்டும்.

**<u>வேளாண்மைத் துறை</u>**

தற்போது பெய்து வரும் வடகிழக்குப் பருவ மழையினால், கடலோர மாவட்டங்களில், தாழ்வான பகுதிகளில் உள்ள நெல் வயல்களில் மழை நீர் தேங்கியுள்ளது. வேளாண்மைத் துறை மூலம், நெல் வயல்களில் போதிய வடிகால் வசதி ஏற்படுத்தி நீரினை விவசாயிகள் வெளியேற்ற உரிய நடவடிக்கை எடுக்கவும், நீர் வெளியேறிய பின் உரமிடுதல் மற்றும் பயிர்ப் பாதுகாப்பு உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், வயல்களில் தேங்கியுள்ள நீர் முழுமையாக வடிந்த பின்பு, பயிர் சேதத்தினை வருவாய்த் துறை, வேளாண்மைத் துறை அலுவலர்களுடன் ஒருங்கிணைந்து கணக்கிட்டு, சேத விவரங்களை முதன்மைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் வேளாண்மைத் துறைக்கு மாவட்ட ஆட்சியர்கள் உடனடியாகத் தெரிவிக்க வேண்டும்.

சம்பா நெல்பயிருக்கு பயிர் காப்பீடு செய்ய இறுதி நாள் **30.11.2017** ஆகும். சம்பா பருவத்தில் விவசாயிகளை அதிக எண்ணிக்கையில் பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் சேருவதற்கு மாவட்ட ஆட்சியர்கள் உரிய நடவடிக்கையை விரைந்து மேற்கொள்ள வேண்டும்.

**<u>கால்நடை பராமரிப்புத் துறை</u>**

கால்நடைகளுக்கு தொற்று நோய்கள் ஏற்படாத வண்ணம் தடுப்பூசிகள் போட வேண்டும். மேலும், போதுமான மருந்துகள் இருப்பில் வைத்துக்கொள்ள வேண்டும். பாதிக்கப்பட்ட பகுதிகளில் போதுமான கால்நடை மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.

இந்த ஆய்வின்போது, கண்காணிப்பு அதிகாரிகள் நிரந்தரத் தீர்விற்காகப் பல்வேறு கருத்துருக்களைத் தெரிவித்தனர். அவர்கள், அவற்றைப் பட்டியலிட்டு தலைமைச் செயலாளர் அவர்களிடம் அளிக்க வேண்டும். அந்தக் கருத்துருக்களின் மீது விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட்டு, வருங்காலத்தில் மழை நீர் தேங்குவது முற்றிலுமாகத் தடுக்கப்படும்.

சுகாதாரத் துறை, நடமாடும் மருத்துவ முகாம்கள் மற்றும் நிரந்தர முகாம்களை அமைத்து, அந்தந்தப் பகுதிக்கு நேரடியாகச் சென்று அளித்த உரிய மருத்துவ சிகிச்சைகளின் காரணமாக தொற்று நோய் பரவுவது முற்றிலுமாகத் தடுக்கப்பட்டது. இதற்காக சுகாதாரத் துறையின் அனைத்து பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து நீர்நிலைகளில் இருக்கின்ற ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.

மேலும், மழை நீர் அகற்றும் பணிகளில் சிறப்பாகச் செயலாற்றிய அனைத்து அமைச்சர்கள், கண்காணிப்பு அதிகாரிகள், அரசு அலுவலர்கள், குறிப்பாக, வருவாய்த்துறை கட்டுப்பாட்டு அறையில் பணிபுரிந்த அலுவலர்கள் காவல் துறை அதிகாரிகள் மற்றும் இரவு பகல் பாராது பணியாற்றும் மாநகராட்சி கடைநிலை ஊழியர்கள் ஆகியோரின் தன்னலமற்ற பணியை நான் பாராட்டுகிறேன்."

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் திரு. கே. ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி. தங்கமணி, மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு.கே.பி. அன்பழகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. இரா. துரைக்கண்ணு, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.ஆர்.பி. உதயகுமார், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ராஜீவ் ரஞ்சன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும்

ஊராட்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு.ஹன்ஸ் ராஜ் வர்மா, இ.ஆ.ப., முதன்மைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் முனைவர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் திரு. விக்ரம் கபூர், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் திரு. எஸ்.கே. பிரபாகர், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., வருவாய்த் துறை செயலாளர் திரு. பி. சந்தரமோகன், இ.ஆ.ப., தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் எம். சாய்குமார், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., காவல் துறை தலைமை இயக்குநர் திரு. டி.கே. இராஜேந்திரன், இ.கா.ப., சென்னை மாநகர காவல் ஆணையர், திரு. ஏ.கே. விஸ்வநாதன், இ.கா.ப., தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறைத் தலைவர் திரு. கே.பி. மகேந்திரன், இ.கா.ப., சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் கடலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர்கள், சென்னை, திருவள்ளூர் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**